**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 36** **நாள்: 13.03.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள், நடைபாதைகள் மற்றும் தெருக்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள உபயோகமற்ற மற்றும் பழுதடைந்த வாகனங்களை 15 நாட்களுக்குள் அப்புறப்படுத்த வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் அறிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இரண்டு, மூன்று மற்றும் நான்கு சக்கர வாகன உரிமையாளர்கள் உபயோகமற்ற, பழுதடைந்த வாகனங்களை சாலையோரங்கள், நடைபாதைகள் மற்றும் தெருக்கள் ஆகியவற்றில் நிறுத்தி வைத்துள்ளனர். இதனால், பொதுமக்களுக்கு இடையூறும், போக்குவரத்திற்கு பாதிப்பும் ஏற்படுகிறது. மேலும், அவ்வாறு நிறுத்தப்படும் வாகனங்களில் மழைநீர் தேங்கி கொசு உற்பத்தியும், பொது சுகாதாரச் சீர்கேடும் ஏற்படுகிறது என பல்வேறு புகார்கள் பெறப்பட்டு வருகிறது. அதனைத் தடுத்திடும் வகையில் சாலையோரங்கள், நடைபாதைகள் மற்றும் தெருக்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள உபயோகமற்ற, பழுதடைந்த வாகனங்களின் உரிமையாளர்கள், இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட **15 நாட்களுக்குள்** உடனடியாக அப்புறப்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்குள் அகற்றப்படாத வாகனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர காவல்துறை உதவியுடன் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும். இந்த வாகனங்களை நிறுத்துவதற்கு வட்டாரம் வாரியாக ஒரு இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்தில் அகற்றப்படும் வாகனங்களை நிறுத்தி வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 1 முதல் 5 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட சாலைகளில் அப்புறப்படுத்தப்படும் வாகனங்களை இராயபுரம் மண்டலம், கோட்டம்–58, சூளை, அவதான பாப்பையா தெருவில் மலேரியா ஸ்டோர் அருகில் அமைந்துள்ள மாநகராட்சி இடத்திலும், மத்திய வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 6 முதல் 10 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட சாலைகளில் அப்புறப்படுத்தப்படும் வாகனங்களை அண்ணாநகர் மண்டலம், கோட்டம்–107, மேயர் சத்திய மூர்த்தி சாலை, கெங்குரெட்டி சுரங்கப்பாதை அருகிலுள்ள மத்திய தார் கலவை நிலைய வளாகத்திலும், தெற்கு வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 11 முதல் 15 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட சாலைகளில் அப்புறப்படுத்தப்படும் வாகனங்களை பெருங்குடி மண்டலம், கோட்டம்–188, வேளச்சேரி–தாம்பரம் சாலையில் அமைந்துள்ள பள்ளிக்கரணை பழைய குப்பை கொட்டும் வளாகத்திலும் நிறுத்தி வைக்கப்பட்டு ஏலம் விடப்படும். எனவே, பொதுமக்கள் சாலையோரங்கள், நடைபாதைகள் மற்றும் தெருக்களில் நிறுத்தி வைத்துள்ள உபயோகமற்ற மற்றும் பழுதடைந்த வாகனங்களை, தாங்களாகவே முன்வந்து உடனடியாக அப்புறப்படுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**